# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:117:2016 நாள்: 22.02.2016

அன்பார்ந்த தோழர்களே,

## சிறப்பு உதவியாளர் பதவிகள்

அகில இந்திய யூனியன் வங்கி ஊழியர் சங்கத்திற்கும் வங்கி நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் 18 சிறப்பு உதவியாளர் பதவிகளுக்கு கடந்த 17.02.2016 அன்று நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில் கீழ்க்கண்ட தோழர், தோழியர்கள் சிறப்பு உதவியாளர்களாக பணி உயர்வு பெற்றுள்ளனர் என்ற தகவலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்:

| எண். | பெயர் | தற்போதுள்ள கிளை | புதிய கிளை |
|---|---|---|---|
| 1. | தோழர்.**S.சிவசங்கர்** | சேவை கிளை, சென்னை | சென்னை நகரம் |
| 2. | தோழர்.**M.சுப்பிரமணிய செட்டி** | திருவல்லிக்கேணி | திருவள்ளூர் |
| 3. | தோழர்.**V.வெற்றிவேல்** | சென்னைபிரதான கிளை | அனக்காவூர் |
| 4. | தோழர்.**G.யுவராஜா** | சென்னைபிரதான கிளை | மேலமாத்தூர் |
| 5. | தோழர்.**K.வினோத் வெங்கடேஷ்** | பழநி | கொட்டாம்பட்டி |
| 6. | தோழர்.**A.செய்யது சுலைமான்** | மேலமாத்தூர் | வாலிகண்டபுரம் |
| 7. | தோழியர்.**A.சண்முகப் பிரியா** | கீராம்பூர் | செட்டிகுளம் |
| 8. | தோழர்.**L.S.சுஜித்** | குன்னூர் | நாகபட்டினம் |
| 9. | தோழியர்.**S.சுமி** | வடசேரி | மார்த்தாண்டம் |
| 10. | தோழர்.**செல்வக்குமார்** | அழகர்கோவில் சாலை | பேரையூர் |
| 11. | தோழர்.**P.மாரிமுத்துராமன்** | சேத்தூர் | சேத்தூர் |
| 12. | தோழர்.**K.சங்கர் மணிகண்டன்** | சிவகங்கை | பட்டுக்கோட்டை |
| 13. | தோழியர்.**S.சுவாதி** | மயிலாடுதுறை | மயிலாடுதுறை |
| 14. | தோழர்.**இளமுருகர் சரவணன்** | கிருஷ்ணகிரி | நாட்றம்பள்ளி |
| 15. | தோழர்.**P.பாண்டுரங்கன்** | கொனவட்டம் | தேவஸ்தானம் |
| 16. | தோழர்.**K.வரதராஜன்** | ஆத்தூர் | ஆத்தூர் |
| 17. | தோழர்.**N.ஸ்ரீனிவாசன்** | ஆத்தூர் | வால்பாறை |
| 18. | தோழர்.**R.அருண்** | திருப்பத்தூர் | குன்னூர் |

இந்தப் பணி உயர்வு நடைமுறையில் கலந்துகொண்டு, வெற்றி பெற்று சிறப்பு உதவியாளர்களான தோழர், தோழியர் அனைவருக்கும் நமது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த பணி உயர்வுத் தேர்வுக்குப் பின் ஏற்பட்டுள்ள கீழ்க்கண்ட சிறப்பு உதவியாளர் பணியிடங்களை நிரப்பும்படி நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது:

| எண். | கிளை |
|---|---|
| 1. | மதுரை |
| 2. | திருச்சி |
| 3. | காரையூர் |
| 4. | நன்னிலம் |
| 5. | நடுக்காவேரி |

தோழர்களிடமிருந்து பெறப்பட்ட, பெறப்படவுள்ள விருப்ப இடமாற்றல் விண்ணப்பங்களின் அடிப்படையில், இடமாற்றல் வழங்கப்பட்டபின்புள்ள கிளைகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்று நிர்வாகம் சுற்றறிக்கை வெளியிடவுள்ளது. தகுதியும், விருப்பமுள்ள தோழர்கள் கலந்துகொள்ளலாம்.

இதன் பின், காலியாகவுள்ள காசாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, தகுதியான தோழர்கள் நியமிக்கப்படுவர். இவை அனைத்தும், புதிய எழுத்தர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்பாக நிறைவு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அகில இந்திய அளவில் சுமார் 1760 புதிய எழுத்தர்கள் வரும் ஏப்ரல் மாதம் நியமிக்கப்படவுள்ளனர்).

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

## <u>பெட்ரோல் - போக்குவரத்து செலவு</u>

நமது நீண்ட நாள் கோரிக்கையான பெட்ரோல் வழங்கப்பட்டபோது, அந்தச் சுற்றறிக்கையில், பெட்ரோல் பெறும் ஊழியர்கள் எந்தப் போக்குவரத்துச் செலவையும் பெறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. நமது அகில இந்திய அமைப்பின் முயற்சியின் காரணமாக சுற்றறிக்கை எண்:6318 நாள்: 15.02.2016 வாயிலாக நிர்வாகம் பெட்ரோல் பெறும் ஊழியர்கள் வழக்கம்போல அனைத்து போக்குவரத்துச் செலவுகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது. எனவே, நமது தோழர்கள், பெட்ரோலுக்கான தொகையையும், போக்குவரத்து செலவுகளுக்காகும் தொகையையும் ஒருங்கே பெற்றுக்கொள்ளலாம்.